மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்கள் ஆழ்கடலில் மீன் பிடிப்பதற்கான அதாவது tunas சூரை மீன் பிடிப்பதற்காக, அவர்களுக்குத் தேவை ஏற்படுமேயானால் MPEDA மூலம் நிதியை வழங்கி வருகிறார்கள். MPEDA–வில் மீனவர்கள் மனு செய்தால், கோரிக்கை வைத்தால் நிச்சயமாக MPEDA நிறுவனம் மூலமாகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிவித்த தேவைகள் நிறைவேற்றித் தரப்படும்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 170, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

170—

பால் குளிரூட்டும் நிலையம்

***106270—திரு. இரா. விசுவநாதன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஒன்றியத்தில் பால் குளிரூட்டும் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திண்டுக்கல் மாவட்டம், நத்தம் ஒன்றியத்தில் எம்.எஸ்.158 நத்தம் கோவில்பட்டி கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் சங்கத்தில் மொத்த பால் குளிர்விப்பான் அமைக்கப்பட்டு 24–7–2008 முதல் செயல்படத் தொடங்கி, தற்போது நாளொன்றுக்கு தினசரி சராசரியாக 4,500 லிட்டர் பால் கொள்முதல் செய்து குளிர்விப்பு செய்யப்பட்டு, திண்டுக்கல் ஒன்றியத்திற்கு அனுப்பப்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

2010 மே 11]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன்.*

திரு. இரா. விசுவநாதன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது பால் குளிரூட்டு மையம் அமைப்பதற்கு முன்பு போடப்பட்ட கேள்வி. இருந்தாலும்கூட, இப்பொழுது திண்டுக்கல் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின் மூலமாக பால் கொள்முதல் செய்வதிலும், கொள்முதல் செய்த பாலுக்கு விலை கொடுப்பதிலும் காலதாமதம் ஏற்படுவதாலும், உற்பத்தி செய்த பாலை எடுத்துச் செல்வதற்குப் போதிய வாகன வசதி செய்யாத காரணத்தினாலும், பால் உற்பத்தியாளர்கள் இப்போது கூட்டுறவு பால் பண்ணைகளிலிருந்து, தனியார் பால் வியாபாரிகளுக்கு விற்பனை செய்துகொண்டிருக்கிறார்கள். இதனால், திண்டுக்கல் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்தினுடைய கொள்முதல் அளவு பெரிதளவு குறைந்திருக்கிறது. இதையெல்லாம் சீர்செய்து, மீண்டும் அங்கே அனைத்து உற்பத்தியாளர்களிடமும் கொள்முதல் செய்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும். அந்தப் பால் குளிரூட்டும் மையம் போன்று செந்துறை பகுதியிலும் அந்தப் பகுதி மக்களுக்குப் பயனுள்ள வகையிலே புதியதாக ஒரு பால் குளிரூட்டும் மையத்தை ஏற்படுத்தினால் திண்டுக்கல் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியத்திற்கும் அது பெரிதும் பயன்படும் என்ற காரணத்தினால், அரசு மற்றொரு பால் குளிரூட்டு மையம் ஏற்படுத்துவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்கள் 5–வது முறையாகத் தமிழக முதல்வராகப் பொறுப்பேற்ற பிறகு, 10 நாட்களுக்கு ஒரு முறையும், ஒரு வாரத்திற்கு ஒரு முறையும், பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகையைத் தொடர்ந்து வழங்கிக்கொண்டிருக்கிறோம். சென்ற ஆட்சிக் காலத்தில், பால் உற்பத்தியாளர்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை 51 கோடி ரூபாயாக இருந்தது. இப்போது, அதை 19 கோடி ரூபாயாகக் குறைத்துக் கொண்டுவந்திருக்கிறோம். ஆக, ஒன்றியங்களிலிருந்து கூட்டுறவுச் சங்கங்களுக்குப் போக வேண்டிய தொகை 19 கோடி ரூபாய்தான் இருக்கிறது. கடந்த 30 ஆம்*

தேதிவரை ஒழுங்காகப் பணம் பட்டுவாடா செய்யப்பட்டுவிட்டது. இந்த ஒரு வார காலத்தில், 10 நாட்களுக்குக் கொடுக்க வேண்டிய தொகை மட்டும் பாக்கி இருக்கிறது. நாளையதினம் இதைக் கொடுத்துவிடுவார்கள்.

ஆக, அந்தப் பகுதியைப் பொறுத்தவரையில், பால் குளிர்விப்பான்கள் அமைக்கப்பட வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே உற்பத்தி செய்யப்படுகின்ற பாலை சரியான விலை கொடுத்துத்தான் எடுக்கிறோம். எங்களிடம் கொடுக்க வேண்டிய பாலில் இதுவரை வந்துகொண்டிருந்த பால் குறையவே இல்லை. பால் தொடர்ந்து கொள்முதல் செய்யப்படுகின்ற காரணத்தால்தான், திண்டுக்கல் மாவட்டத்தில் புதிதாக 7 இடங்களில், பள்ளப்பட்டி, பூலாம்பட்டி, நொச்சியோடைப்பட்டி, குறவன்காலனி, கூட்டுக்காரன்புதூர், விடுதலைப்பட்டி, புளிமரத்துப்பட்டி. ஆகிய 7 இடங்களில் 5,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட, 3,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட பால் குளிர்விப்பான்கள் அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. இன்னும் 3 மாத காலத்தில் பணியும் தொடங்கப்பட இருக்கிறது. எனவே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டுக்கொண்டதைவிட அதிகபட்சமாகக் குளிர்விப்பான்களை அமைப்பதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. விசுவநாதன்.

திரு. இரா. விசுவநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நத்தம் பகுதி மக்கள் விவசாயத்திற்கு அடுத்தபடியாக, சிறு, குறு விவசாயிகள் மற்றும் கூலித் தொழிலாளிகள் பெரிதும் நம்பியிருப்பது பால் உற்பத்தித் தொழிலைத்தான். ஆனால், இன்றைக்கு திண்டுக்கல் கூட்டுறவு ஒன்றியத்தின்மூலமாகக் கொள்முதல் செய்யப்படுகின்ற பாலைவிட, இரண்டு மடங்கு அளவு கூடுதலாக சர்வ சேவா போன்ற அமைப்புகள் மற்றும் தனியார் வியாபாரிகள் அதிக அளவிலே கொள்முதல் செய்கிறார்கள். அந்த அளவிற்குத் தனியாருடன் போட்டி போட்டு, அவர்கள் செய்கின்ற அளவிற்கு பால் உற்பத்தியாளர்களுக்குச் செய்து கொடுக்கின்ற வசதியை, திண்டுக்கல் பால் உற்பத்தியாளர்கள் செய்துகொடுப்பதில்லை.

2010 மே 11]

ஆகவே, தனியார் செய்கின்ற அளவிற்கு, அவர்களோடு போட்டி போடுகின்ற அளவிற்கு திண்டுக்கல் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் தன்னுடைய நிர்வாகத்தைச் சீரமைத்து, செம்மைப்படுத்தி கொள்முதல் அளவைக் கூட்டுவதற்கு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியாரோடு போட்டி போடுவது மட்டுமல்லாமல், தனியாரைவிட பால் கொள்முதல் விலையை அதிகமாகக் கொடுத்துதான் நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். ஆக, எங்களுக்குக் கிடைக்க வேண்டிய பால் உற்பத்தி அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. பால் உற்பத்தியாளர்களுக்கு விலை ஏற்றம் அதிகமாகக் கொடுக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் 5 வது முறையாக ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகுதான், தொடர்ந்து ஆண்டுதோறும் 2007–லே, 2008–லே, 2009–லே, பசும் பாலுக்கு ரூ.5–50 காசும், எருமைப் பாலுக்கு ரூ.10–50 காசும் உயர்த்திக் கொடுத்திருக்கிறோம்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

மாண்புமிகு திரு. உ. மதிவாணன்: அதோடு மட்டுமல்லாமல், சென்ற ஆட்சிக் காலத்தில் 1991–லிருந்து 1996 வரை அவர்கள் கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்தது 2 ரூபாய் 50 காசு. பால் விற்பனை விலையை 3 ரூபாய் 50 காசு அதிகமாக அவர்கள் உயர்த்தியிருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் 1996–இலே ஆட்சிக்கு வந்த பிறகு, 2 ரூபாய் 50 காசு கொள்முதல் விலையை உயர்த்தியிருக்கிறோம். பால் விற்பனை விலையையும் 2 ரூபாய் 50 காசுதான் உயர்த்தியிருந்தோம். மீண்டும், 2001–லிருந்து 2006 வரை 1 ரூபாய் 50 காசு கொள்முதல் விலையை உயர்த்திக் கொடுத்தார்கள். ஆனால் விற்பனை விலையை 2 ரூபாய் உயர்த்தினார்கள். அதாவது, 50 காசுகள் பால் விற்பனை விலையில் அதிகமாக ஏற்றியிருக்கிறார்கள். திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்த பிறகு, கடந்த நான்கு ஆண்டுகளில்

கொள்முதல் விலையை பசும் பாலுக்கு 5 ரூபாய் 50 காசும், எருமைப் பாலுக்கு 10 ரூபாய் 50 காசும் உயர்த்தியிருக்கிறோம். ஆனால், பால் விற்பனை விலையை 5 ரூபாய் 25 காசுகள் மட்டும், அதாவது குறைவாகத்தான் வைத்திருக்கிறோம். ஆகவே, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்த பிறகுதான் பால் உற்பத்தியாளர்களுக்கு அதிகமாகத் தொகை கொடுத்து, பால் கொள்முதல் செய்து வருகிறோம் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்-விடைகள் முடிவுற்றன. (குறுக்கீடுகள்)

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: நேற்று ஓர் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்பு . . . (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: எடுக்கலாம், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ். (குறுக்கீடு) நான்தான் கேட்கிறேன் என்று சொல்கிறேன் இல்லையா? (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

(ஆ) விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் பிரபாகரனின் தாயார் பார்வதியம்மாள் மருத்துவ சிகிச்சைக்காகத் தமிழகத்திற்கு வர மத்திய அரசு அனுமதி அளித்தது

***திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றையதினம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் விதி 110-ன்கீழ் இந்த அவைக்கு அளித்த அறிக்கையில் விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு. பிரபாகரனினுடைய தாயார் பார்வதி அம்மாள் அவர்களுக்கு நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய பெருமுயற்சியின்பேரில்